கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 131 | 16-11-2025 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 131 | 16-11-2025 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றியால் தமிழக, கேரள மாநில பாஜகவுக்கு புது சக்தி: பிரதமர் மோடி கருத்து



புதுடெல்லி: நவ.16–

டெல்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் பிஹார் தேர்தல் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

அவர் பேசியதாவது: பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றியை பெற்றிருக்கிறது. ஒட்டுமொத்த தேசத்தின் பார்வையும் பிஹார் மக்கள் மீது திரும்பியிருக்கிறது. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் பொதுமக்கள் பெருந்திரளாக திரண்டு வந்து வாக்களித்தனர். வளர்ச்சிக்கு ஆதரவாக பிஹார் மக்கள் வாக்களித்து உள்ளனர். முந்தைய தேர்தல் வரலாற்று சாதனைகள் தற்போது உடைக்கப்பட்டு உள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பிஹார் மக்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். குறிப்பாக பெண்கள், இளைஞர்கள், விவசாயிகளுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

முதல்வர் நிதிஷ் குமாரின் சீரிய தலைமை தேர்தல் வெற்றிக்கு வழி வகுத்தது. கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் மிகக் கடுமையாக உழைத்தனர்.

பிஹாரில் அண்மையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடைபெற்றது. இந்த நடைமுறைக்கு ஒத்துழைப்பு அளித்த மக்களை பாராட்டுகிறேன். அதன்பிறகு மிக அமைதியாக பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டு உள்ளது. தேர்தல் அலுவலர்கள், பாதுகாப்புப் படை வீரர்கள் மிகச் சிறப்பாக பணியாற்றினர். எந்தவொரு பகுதியிலும் மறுவாக்குப்பதிவு நடைபெறவில்லை.

பிஹார் தேர்தல் பிரச்சாரத்தின்போது பொய்கள் பரப்பப்பட்டன. அவற்றை மக்கள் நம்பவில்லை. ஜாமீனில் வெளியே நடமாடும் நபர்களை ஆதரிக்க மாட்டோம் என்று மக்கள் திட்டவட்டமாக தீர்ப்பளித்து உள்ளனர். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பிஹார் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்த வளர்ச்சிப் பயணம் தொடரும்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றியால் தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்குவங்கம், அசாம் மாநிலங்களின் பாஜக தொண்டர்களுக்கு புது சக்தி கிடைத்திருக்கிறது. பாஜக தொண்டர்களால் முடியாதது என்று எதுவுமே இல்லை. அவர்கள் மனது வைத்தால் எதையும் சாதிப்பார்கள். பிஹாரில் காட்டாட்சி ஏற்படுவது தடுக்கப்பட்டு உள்ளது. மேற்குவங்கத்தில் தற்போது நடைபெறும் காட்டாட்சியை மக்கள் அகற்ற வேண்டும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்குவங்கம், அசாம் மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. பிஹார் மாநில தேர்தல் வெற்றி,இந்த மாநிலங்களிலும் எதிரொலிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக் காட்டி உள்ளார்.

## பிஹார் தேர்தல் முடிவு அனைவருக்கும் பாடம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை: நவ.16–

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அனைவருக்கும் பாடங்களை வழங்கியுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் குறிப்பிட்டுள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 6, 11 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றுள்ளது. மெகா கூட்டணிக்கு 35 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

இந்நிலையில் பிஹார் தேர்தல் முடிவு குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘அனைவருக்கும் பாடங்களை வழங்கியுள்ள பிஹார் சட்டமன்றத் தேர்தல்’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “பெரும் வெற்றியைப் பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ் குமாருக்கு எனது பாராட்டுகள். பிஹார் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவருக்கு எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஓயாமல் பரப்புரை மேற்கொண்ட இளந்தலைவர் தேஜஸ்வி யாதவுக்கும் எனது பாராட்டுகள்.

நலத் திட்ட விநியோகம், சமூக கொள்கைக் கூட்டணிகள், நாம் சொல்ல வேண்டிய அரசியல் ரீதியான செய்தியைத் தெளிவாக மக்களிடம் சொல்வது, இறுதி வாக்குப் பதிவாகும் வரை அர்ப்பணிப்புடன் தேர்தல் பணியாற்றுவது எனப் பலவற்றையும் ஒரு தேர்தல் முடிவு பிரதிபலிக்கிறது. இண்டியா கூட்டணியில் உள்ள அனுபவமிக்க தலைவர்கள் இத்தகைய செய்தியை உணரவும், இனி எழும் சவால்களை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவுமான ஆற்றலைப் பெற்றவர்கள்.


அதே வேளையில், இத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகளையும் பொறுப்பற்ற செயல்களையும் இல்லாமல் ஆக்கிவிடாது. தேர்தல் ஆணையத்தின் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்குக் கீழிறங்கியுள்ளது. வலுவான, நடுநிலையான தேர்தல் ஆணையத்தைக் கோருவது நம் நாட்டு மக்களின் உரிமை. தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் ஆணைய கூட்டத்துக்கு தவெகவையும் அழைத்திடுக’: விஜய் கடிதம்

சென்னை: நவ.16–

தேர்தல் ஆணையம் நடத்தும் கூட்டங்களுக்கு, தவெகவுக்கு அழைப்பு விடுக்கக் கோரி இந்திய மற்றும் தமிழக தேர்தல் ஆணையத்துக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில்,“தேர்தல் ஆணைய கூட்டத்துக்கு தவெகவுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. வரவிருக்கும் தேர்தல்களில் மாநிலம் முழுவதும் போட்டியிட உள்ளோம். ஒவ்வொரு குடிமகனின் குரலும் கேட்கப்படும் வகையில், ஜனநாயக செயல்முறையை மேம்படுத்துவதற்கு எங்கள் கட்சி உறுதியாகவும், அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வருகிறது.



தேர்தல் ஆணையம் இந்திய தேர்தல் அமைப்பில் முக்கிய பங்குதாரர். பதிவு பெற்ற கட்சி என்ற அடிப்படையில் தவெகவிற்கும் அழைப்பு விடுக்க வேண்டும். சமத்துவத்தையும், ஜனநாயக சமநிலையையும் பாதிக்கும் வகையில் இந்த செயல்பாடு உள்ளது. தேர்தல் செயல்முறைகள் முழுமையாக, வெளிப்படையாக இருக்க வேண்டும் என்றால், தவெகவையும் அடுத்தடுத்த ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு கூட்டங்களுக்கு தேர்தல் ஆணையம் அழைக்க வேண்டும் .ஜனநாயக நடைமுறைகளை பின்பற்றி ஒவ்வொரு குடிமகனின் குரலையும் தவெக பதிவு செய்ய விரும்புகிறது. தேர்தல் ஆணையத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்க தவெக தயாராக இருக்கிறது.

தமிழக மாநில தேர்தல் ஆணையத்திற்கும், தமிழக முதன்மை தேர்தல் அதிகாரிக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். வரவிருக்கும் தேர்தல்களை முன்னிட்டு நடத்தப்படும் அரசியல் கட்சிகளுடனான அனைத்து ஆலோசனை கூட்டங்களிலும் தவெக சேர்க்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்” என்று அவர் கடிதத்தில் எழுதியுள்ளார். எஸ்ஐஆர் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களில் தவெக தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால், அக்கூட்டங்களில் தங்கள் கட்சிக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என வலியுறுத்தி தேர்தல் ஆணையத்துக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளது கவனிக்கத்தக்கது.

## தமிழகத்தில் 1 கோடி பேர் நீரிழிவு நோயால் பாதிப்பு
## அமைச்சர் மா. சுப்பிரமணியன்



சென்னை: நவ.16–

உலக நீரிழிவு தினத்தையொட்டி சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் சுகாதாரத்துறை சார்பில் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு பதாகை வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு பேசியதாவது: உலக அளவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு முதலிடத்தில் சீனா உள்ளது. 2வது இடத்தில் இந்தியா இருக்கிறது. ஆண்டிற்கு 34 லட்சம் பேர் நீரிழிவு நோயினால் உயிரிழக்கிறார்கள். ஒவ்வொரு ஆறு வினாடிக்கும் ஒருவர் மரணத்தை தழுவுகிறார். இந்தியாவில் 20 முதல் 79 வயது வரை உள்ள முதியவர்கள் 9 கோடி பேர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசின் பாதம் காப்போம் திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 9 லட்சம் பேர் பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. நீரிழிவு, வாதம் நோயினால் 72 லட்சத்து 70 ஆயிரத்து 292 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு நோய் ஏற்பட்டு 33 ஆயிரத்து 185 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 26,448 பேர் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். 3169 பேருக்கு உறுப்புகள் நீக்கப்பட்டு உள்ளன. எனவே தமிழகத்தில் நீரிழிவு நோய் பாதிப்பை தடுக்க தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே இதற்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதியும் தற்போது செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நீரிழிவு நோயை அலட்சியமாக கருதாமல் கவனமாக கையாள வேண்டும். இதனால் மற்ற உறுப்புகள் பாதிக்கப்படுகிறது. எனவே மீண்டும் எச்சரிக்கை உடன் இருக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் நல வாழ்வு குழு இயக்குனர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரத்துறை இயக்குனர் சோமசுந்தர, மருத்துவ கல்வி இயக்குனர் ராஜ குமாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.”,

## பயங்கரவாதிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட குண்டு வெடித்து 9 பேர் பலி: ஸ்ரீநகர் காவல் நிலையத்தில் பயங்கரம்

ஸ்ரீநகர்: நவ.16–

ஸ்ரீநகரில் பயங்கரவாதிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் வெடித்து சிதறியதில் போலீசார் உள்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஜம்மு காஷ்மீரின் நவ்காம் பகுதியில் கடந்த அக்டோபர் மாதம் பயங்கரவாதிகள் பெயரில் மிரட்டல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில், படித்த இளைஞர்களை மூளைச்சலவை செய்து பயங்கரவாத செயல்களுக்கு பயன்படுத்தும் ‘ஒயிட் காலர்’ பயங்கரவாத அமைப்பு செயல்படுவது தெரியவந்தது. இந்த வழக்கின் தொடர்ச்சியாக, அரியானா மாநிலம் ஃபரிதாபாத்தில் உள்ள அல் ஃபலா பல்கலைக்கழகத்தில் சோதனை நடத்திய போலீசார், மருத்துவர்களான முஜாமில் அகமது கனாய் மற்றும் ஷஹீன் சயீத் ஆகியோரைக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 350 கிலோவுக்கும் அதிகமான அம்மோனியம் நைட்ரேட், பொட்டாசியம் நைட்ரேட், சல்பர் போன்ற வெடிமருந்து தயாரிக்கப் பயன்படும் ரசாயனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்கள் அனைத்தும் ஸ்ரீநகர் புறநகர்ப் பகுதியான நவ்காமில் உள்ள காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன. நேற்று இரவு, அந்த வெடிபொருட்களில் இருந்து தடயவியல் நிபுணர்கள் மாதிரிகளைச் சேகரித்துக் கொண்டிருந்தபோது, யாரும் எதிர்பாராத விதமாக அவை பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இந்த கோர விபத்தில் காவல் நிலையக் கட்டிடம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகள் பலத்த சேதமடைந்தன. இந்த குண்டுவெடிப்பில் முதலில் 4 பேர் உயிரிழந்ததாகத் தகவல் வெளியான நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், காவல் துறையினர் மற்றும் 3 பொதுமக்கள் உட்பட 27 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குண்டுவெடிப்புக்குப் பிறகும் சிறிய அளவிலான வெடிப்புகள் தொடர்ந்ததால், மீட்புப் பணிகளை உடனடியாகத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. உயிரிழந்தவர்களின் உடல்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்த விபத்து, வெடிபொருட்களைக் கவனக்குறைவாகக் கையாண்டதால் ஏற்பட்டதா அல்லது பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களில் ஏதேனும் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததால் நிகழ்ந்ததா என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே, ஜெய்ஷ் இமுகமது பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான ‘பி.ஏ.எஃப்.எஃப்’ இந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ள தாகத் தகவல் வெளியாகியுள்ளது.

‘இந்த தாக்குதலுக்கு நாங்கள் தான் காரணம்’ என்று அந்த அமைப்பு கூறியுள்ள நிலையில், அதன் உண்மைத்தன்மை குறித்தும் சரிபார்க்கப்பட்டு வருகிறது. காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் வெடித்து சிதறியதில் போலீசார் உள்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## கோடநாடு வழக்கு டிச. 19க்கு தள்ளிவைப்பு

ஊட்டி: நவ.16–

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கோடநாடு எஸ்டேட்டில் 2017ல் காவலாளி கொல்லப்பட்டு, எஸ்டேட் பங்களாவில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இது தொடர்பாக 10 பேரை கோத்தகிரி போலீஸார் கைது செய்தனர். பின்னர் இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. தற்போது வழக்கு விசாரணை நீலகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

மாவட்ட நீதிபதி முரளிதரன் முன்னிலையில் நேற்று நடைபெற்ற விசாரணையில், வழக்கை விசாரித்து வரும் சிபிசிஐடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையிலான போலீஸாரும், குற்றம் சாட்டப்பட்டுள்ள, கேரள மாநிலத்தைச் சேர்ந்த வாளையாறு மனோஜ், ஜித்தின் ஜாய் ஆகியோரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். வழக்கை விசாரிக்க அரசுத் தரப்பில் கூடுதல் காலஅவகாசம் கேட்கப்பட்டது. இதையடுத்து, வழக்கு விசாரணையை டிசம்பர் 19ம் தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதி முரளிதரன் உத்தரவிட்டார்.

## தமிழகத்திலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும்
## நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



பிஹாரை அடுத்து, 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலிலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும் என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

பிஹார் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், பெருவாரியான இடங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலை வகித்தது. முன்னணி நிலவரங்கள் வெளியாகிக் கொண்டிருந்த சமயத்தில் நெல்லையில் செய்தியாளர்களிடம் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: பிஹார் மாநிலத்தில் உள்ள 243 தொகுதிகளில்,தேசிய ஜனநாயகக் கூட்டணி 190 இடங்களில் முன்னணியில் உள்ளது. இது எங்கள் கூட்டணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. அந்த மாநிலத்தில் ஏற்கெனவே நடந்துவரும் நல்லாட்சியை மக்கள் அங்கீகரித்துள்ளனர்.

அத்துடன், தொடர்ச்சியாக இண்டியா கூட்டணியை மக்கள் புறக்கணித்துக் கொண்டே வருகிறார்கள். இண்டியா கூட்டணிக்கு தேசிய அளவில் தொடர் தோல்விகள் ஏற்பட்டு வருகிறது. பிஹாரை அடுத்து, 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலிலும் எங்கள் கூட்டணி அபார வெற்றி பெறும். தேர்தல் ஆணையம், அமலாக்கத்துறை, வருமான வரித்துறை இவையெல்லாமே சுதந்திரமாகச் செயல்படும் தனிப்பட்ட அமைப்புகள்.

இவற்றை, அரசியல் கட்சியுடன் ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல. கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றி பெற்றபோது, தேர்தல் ஆணையம் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது? திமுக ஜெயித்தால் தேர்தல் ஆணையம் நன்றாக செயல்படுகிறது என்று அர்த்தம். தோற்றுவிட்டால் தேர்தல் ஆணையம் ஒரு சாராருக்கு ஆதரவாக செயல்படுகிறது என்று அர்த்தமா? இப்படிப் பேசுவது முற்றிலும் சந்தர்ப்பவாத அரசியல்.

தேர்தல் ஆணையத்தின் மீது இப்படியெல்லாம் அவதூறு பரப்பியவர்களை பிஹார் மக்கள் புறக்கணித்துள்ளனர். அங்கு இந்தியா கூட்டணியின் தோல்விக்கு இதுவே முக்கிய காரணம். பிஹாரில் தேசிய ஜனநாயக கூட்டணி பெற்றிருக்கும் இந்த வெற்றியானது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஈரோடு கொடுமுடி அருகே அஞ்சூர் பஞ்சாயத்து பகுதியில் சிறப்பு கால்நடை முகாம்...

## திங்கட்கிழமை நடைபெறும் நிலையில் விவசாயிகளுக்கு அழைப்பு..

ஈரோடு,நவ. 16

ஈரோடு அருகே உள்ள கொடுமுடி, அஞ்சூர் பஞ்சாயத்து பகுதியில் நாளை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கால்நடைத்துறை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் அஞ்சூர் பஞ்சாயத்து பகுதிக்கு உட்பட்ட, நல்ல செல்லி பாளையத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இந்த சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில், விவசாயிகள் தங்களின் கால்நடைகளை அழைத்து வந்து அதற்குரிய சிகிச்சைகளை பெற்று செல்லுமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கால் நடை மருத்துவ முகாமில் பசு, எருமை, ஆடு, கோழி மற்றும் நாய் என கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம்,செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் சினை பிடிக்காத கால்நடைகளுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட உள்ளன.

மேலும் கால்நடைகளுக்கு தாது உப்பு கலவை விநியோகம்,கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசி, நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசியும் செலுத்தப்பட உள்ளது.

மேலும் முகாமில் கன்று பேரணி நடத்தப்பட்டு 3 சிறந்த கிடாரி கன்றுகளுக்கு பரிசுகளும், கால்நடை வளர்ப்பில் சிறந்த விளங்கும் மூன்று விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை வேளாண்மைக்கான பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

எனவே கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் அஞ்சூர் பஞ்சாயத்துக் குட்பட்ட பகுதிகளை சேர்ந்த விவசாய பெருங்குடி மக்கள் இந்த சிறப்பு கால்நடை பராமரிப்பு மற்றும் விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு தங்களின் கால்நடைகளுக்கு உரிய முறையில் சிகிச்சை மேற்கொண்டு பயன் பெற வேண்டுமென கொடுமுடி வட்டார கால்நடை துறை சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# அரசுதனியார் மருத்துவக் கல்லூரிகளில் 400 எம்.பி.பி.எஸ். இடங்கள் காலி சிறப்பு கவுன்சிலிங் இன்று தொடங்குகிறது

"சென்னை: நவ. 16–

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் உள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எம்.பி. பி.எஸ். இடங்களை நிரப்ப 3 கட்டமாக கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் 400 எம்.பி.பி.எஸ். இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன.அரசு மருத்துவக் கல்லூரிகளில் 2 இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 58 நிரப்பப்படாமல் உள்ளன. நீலகிரி, திருச்சி அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா ஒரு எம்.பி.பி.எஸ். இடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்ப சிறப்பு கலந்தாய்வு நடத்தப்படுகிறது.மருத்துவ படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டு கலந்தாய்வு முடிவுகள் வெளியாக தாமதம் ஆவதால் சிறப்பு கலந்தாய்வு தேதி மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. அதன்படி கல்லூரிகளில் இடங்களை தேர்வு செய்வதற்காக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அவகாசம் நேற்று மாலை 5 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.இடங்கள் ஒதுக்கீட்டு நடைமுறை இன்று (16ந்தேதி) இறுதி செய்யப்பட்டு 17ந்தேதி அறிவிக்கப்படும் என மருத்துவக் கல்வி இயக்கக மாணவர் சேர்க்கை குழு தெரிவித்துள்ளது. இணைய தளம் வழியாக ஒதுக்கீட்டு ஆணைகளை பதிவிறக்கம் செய்து கொண்டு வருகிற 20ந் தேதிக்குள் கல்லூரிகளில் சேர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.தனியார் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் கல்வி கட்டணம் அரசு நிர்ணயித்துள்ளதை விட அதிகமாக வசூலிப்பதால் புகார் எழுந்துள்ளது. அதிக கட்டணம் வசூலித்தால் கட்டண குழுவிடம் புகார் தெரிவிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.",





புதுச்சேரி மாநில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், கலைமாமணி மு.கு.ராமன் அவர்கள் கடந்த 22.10.2025 அன்று இயற்கை எய்தினார். அவரின் நினைவை போற்றும் விதமாக புதுச்சேரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 15.11.2025 காலை 10.30 மணியளவில் பாரதி வீதி தியாகுமுதலியார் வீதி சந்திப்பில் அவரது படத்திறப்பும், அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தநிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் அ.மு.சலீம் தலைமை தாங்கினார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் திரு. இரா. முத்தரசன் மற்றும் புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திருமிகு. இரா. சிவா அவர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் கோபால், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், வடிவேல், கிளை செயலாளர் கிரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்தினார்.

# தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கிய ஈரோடு ஆட்சியர்




ஈரோடு மாவட்டம் தாளவாடி, அரசு மேல்நிலைப், நடைபெற்ற நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்டத்தின் கீழ், மருத்துவ முகாம் மூலம் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் சார்பில் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கான அடையாள அட்டை இணை, ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி வழங்கினார்.

# கூடங்குளம் அருகே சாலையோரத்தில் அரசு பஸ் கவிழ்ந்து விபத்து 27 பயணிகள் காயம்",

"நெல்லை: நவ.16–

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் இருந்து நாகர்கோவில் நோக்கி இன்று காலை அரசு பஸ் ஒன்று புறப்பட்டு சென்று கொண்டிருந்தது. பஸ்சில் 60 பயணிகள் வரை பயணம் செய்தனர்.அந்த பஸ் கூடங்குளம் அருகே உள்ள முருகானந்தபுரம் பகுதியில் வந்தபோது எதிரே அந்த வாகனத்திற்கு வழி விடுவதற்காக பஸ் டிரைவர் ஓரமாக நிறுத்த முற்பட்டுள்ளார். அப்போது சமீப காலமாக பெய்த மழையினால் சாலையோரம் இருந்த மண் ஈரப்பதத்துடன் இருந்ததால் பஸ் டயர் கீழே இறங்கவும், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து



சாலையோர பள்ளத்தில் பஸ் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 27 பேர் சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். விபத்து ஏற்பட்ட உடனே தகவல் கிடைத்ததால் 108 ஆம்புலன்ஸ், தீயணைப்பு, காவல்துறை அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் காயமடைந்தவர்களை மீட்டு கூடங்குளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயங்கள் அதிகமாக இருந்த பயணிகள் நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.விபத்து எப்படி ஏற்பட்டது? என்பது குறித்து கூடங்குளம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ",





அரியலூர் மாவட்டம் மல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் சிவனேசன். இவர் நடன கலைஞராக இருந்துள்ளார் இந்நிலையில் தஞ்சாவூரில் இருந்து அரியலூர் நோக்கி வந்த தனியார் பேருந்து வாரணவாசி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை இறக்கிவிட்டு நகர்ந்த போது சீனிவாசன் அரியலூருக்கு செல்வதற்காக பேருந்தின் முன் பக்க படிக்கட்டில் ஏற நகர்ந்து கொண்டிருந்த பேருந்தின் முன்பாக ஓடிய போது பேருந்து மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் அப்போது அரியலூரிலிருந்து கீழப்பழுவூர் நோக்கி சென்ற போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் வாரணவாசியில் நடைபெற்ற விபத்தை அறிந்து உடனடியாக காரில் இருந்து இறங்கி விபத்து குறித்து அங்கிருந்த போலீசாரிடம் கேட்டறிந்தார் இதனையடுத்து உடனடியாக அமரர் ஊர்தியை வரச் செய்து உயிரிழந்தவரின் உடலை உடனடியாக பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு போலீஸாருக்கு அறிவுறுத்தினார்

விபத்து குறித்து கீழப்பழுவூர் போலீசார் வழக்கு பதிவு செய்து உயிரிழந்த சிவனேசனின் உடலை பிரேத பரிசோதனைக்காக அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்

# செஞ்சியில் லொயோலா கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி






செஞ்சி, நவ. 16–

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் லொயோலா கல்லூரி மாணவர்கள் சார்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.

பேரணியில் பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் பெருமளவில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு போதைப்பொருள் பயன்பாட்டின் அபாயங்களை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி தலைவர் மொக்தியார் அலி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பேச்சில் அவர் தெரிவித்ததாவது:

"போதை என்பது வாழ்க்கையின் மிக மோசமான அங்கமாக மாறி வருகிறது. இது புற்றுநோயை உருவாக்கும் அபாயம் உள்ளதுடன், இளைஞர்களின் எதிர்காலத்தையே அழிக்கும் ஆபத்தும் உள்ளது. பாதுகாப்புடன் இருந்து, போதைப்பொருளில் இருந்து விலகி வாழ்க்கையை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என அறிவுரையளித்தார்.

பேரணியில் பலர் தங்கள் ஆதரவை பதிவு செய்து, விளக்கப் பதாகைகள் ஊர்வலமாக எடுத்துச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பாக பட்டுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலக வாயிலின் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசிக்கு சங்கத் தலைவர் தலைவர் லட்சுமணன் தலைமையேற்றார். தமிழ்நாடு ஓய்வுபெற்ற வருவாய்துறை கிராம உதவியாளர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் தன்ராஜ் கொடியேற்றினார்.

ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் செபஸ்டின்*சிறப்புரையாற்றினார். துணைத் தலைவர் ராஜமாணிக்கம் முன்னிலை தமிழ்நாடு வருவாய் துறை கிராம உதவியாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் .வெங்கடாஜலபதி. தமிழ்நாடு ஓய்வுபெற்ற வருவாய் துறை கிராம உதவியாளர் சங்கத்தின் வட்டத் தலலவர் ஜெயக்குமார் நன்றியுரையாற்றினார். தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கத்தின் வட்டத் தலைவர் கஜேந்திரன். மற்றும் முன்னணி தோழர் அன்பழகன் பங்கேற்ற சிறப்பித்தனர்.

# சேலத்தில் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

சேலம், நவ. 16–

சேலம் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் பிருந்தாதேவி துவக்கி வைத்தார்.

சேலத்தில் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மற்றும் சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில், தேசிய குழந்தைகள் தினம், நவம்பர்19 உலக குழந்தைகளுக்கெதிரான வன்கொடுமைகள் தடுப்பு தினம் மற்றும் நவம்பர் 20 சர்வதேச குழந்தைகள் தினம் ஆகியவற்றை முன்னிட்டு குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது.

சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணியை, கலெக்டர் பிருந்தாதேவி தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இப்பேரணி, திருவள்ளுவர் சிலை, பழைய பஸ் ஸ்டாண்ட், காந்தி சிலை, பெரியார் சிலை மற்றும் சேலம் மாநகராட்சி அலுவலகம் வழியாக வந்து மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நிறைவுபெற்றது.

பேரணி முடிவில் குழந்தை உரிமை மற்றும் பாதுகாப்பு சார்ந்த விழிப்புணர்வு வீதி நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. பேரணியில் நீல நிறத்தில் உடையணிந்து 18 வயதிற்கு மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்பு மாவட்ட நிலை அலுவலர்கள், மருத்துவ துறையினர், காவல் துறையினர், சமூக நலத்துறை பணியாளர்கள் என 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக குழந்தைகள் தின விழிப்புணர்வு உறுதிமொழியை கலெக்டர் பிருந்தாதேவி வாசிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சந்தியா, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் கஷ்மீர்ராஜ், குழந்தைகள் நலக்குழு தலைவர் எழில் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர்; மேல்நிலைப்பள்ளியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்.



அரியலூர், நவ.16–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியதை தொடர்ந்து அரியலூர் மேல்நிலைப் பள்ளியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர் தரமான கல்வியை கிடைக்கச் செய்து அவர்களது வாழ்வை முன்னேற்றும் வகையில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொருளாதார சூழ்நிலையால் அவர்களது கல்வி எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 202526ஆம் கல்வி ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அமைச்சர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக அரியலூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 3,306 மாணவர்கள், 3,582 மாணவியர்கள் என மொத்தம் 6,888 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளி, நிர்மலா (பெ) மேல்நிலைப்பள்ளி மற்றும் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளிகளை சேர்ந்த 778 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின் கீழ் பயன்பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி காவியா அவர்கள் தெரிவித்ததாவது,

எனது பெயர் காவியா. நான் அரியலூர் பெரிய தெருவில் வசித்து வருகிறேன். அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். நான் தினமும் பள்ளிக்கு நடந்து வருகிறேன். இந்நிலையில் எனக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக தினமும் பள்ளிக்கு சரியான நேரத்தில் சென்று வருவதுடன், மாலை பள்ளி முடிந்தவுடன் தாமதமின்றி விரைவாக வீட்டிற்கு செல்ல முடியும். நான் சிறந்த முறையில் கல்வி கற்க, சிரமமின்றி பள்ளிக்கு சென்று வரும் வகையில் விலையில்லா மிதிவண்டியை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாணவி காவியா தெரிவித்தார்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின்கீழ் பயன்பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் ஸ்ரீராம் தெரிவித்ததாவது,

எனது பெயர் ஸ்ரீராம். நான் அரியலூர் அரசு மேல்நிலைபள்ளியில் பயின்று வருகிறேன். தினமும் வீட்டிலிருந்து பள்ளிக்கு சென்று வருகிறேன். சில நேரங்களில் சரியான நேரத்தில் பள்ளிக்கு வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தவிற்கிணங்க 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எனக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதனால் தினமும் நான் பள்ளிக்கு மிதிவண்டில் எளிதாக சென்று வருவதுடன், குறிப்பிட்ட நேரத்திற்கு தாமதமின்றி பள்ளிக்கு செல்வதுடன், வீட்டிற்கும் சரியான நேரத்திற்கு வர முடிகிறது. இதனால் எனது கல்வி தரம் மேம்பாடு அடைந்துள்ளது. அரசு பள்ளியில் பயிலும் என்னைப்போன்ற ஏழை, எளிய மாணவர்களும் சிரமமின்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் வகையில் விலையில்லா மிதிவண்டியை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாணவன் ஸ்ரீராம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், முதன்மைக் கல்வி அலுவலர் ரேணுகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அலுவலர் (பொ) சுமதி, மாவட்டக் கல்வி அலுவலர் பாலசுப்ரமணியன், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஈரோடு அருகே முத்து கவுண்டன் பாளையம் செண்பக மலை குமார் சுப்பிரமணியர் கோவில் கும்பாபிஷேகம் கல்வெட்டு அகற்றம்...

## கோவிலின் செயல் அலுவலர் திலகவதி மீது இணை ஆணையரிடம் பொதுமக்கள் புகார் மனு..






ஈரோடு. நவ. 16

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அருகே உள்ள முத்து கவுண்டன் பாளையம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ செண்பக மலை குமார் சுப்பிரமணியர் கோவிலில், கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மூன்று தலைமுறைனர் வைத்த, செயல் அலுவலர் அகற்றியதால் அவர் மீது இணை ஆணையாளரிடம் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து லக்காபுரம கிராம கோவில்கள் நடைமுறை நிர்வாகிகள் எல் ஆர் சண்முகம் என்பவர் இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையரிடம் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார். அந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளதாவது..

லக்காபுரம் அருள்மிகு ஸ்ரீ செண்பக மலை குமார சுப்பிரமணியர் கோவில் நடைமுறை நிர்வாகியாக இருந்து வந்தேன். இந்த திருக்கோவிலில் லக்காபுறத்தில் உள்ள நான் சார்ந்த மேற்கு வலசு ஆதிகுளம் கிழக்கு வலசு ஆ வன்குளம் மற்றும் அடிக்கரை வலசு, வில்லன் குலம், ஆகிய மூன்று குலத்தினர் மற்றும் கடந்த பல நூறாண்டுகளாக கோவிலை. ஆகவே கடந்த6/12/2019 அன்று நடைபெற்ற கும்பாபிஷேகமானது எங்களது மூன்று குலத்தினர் கோவில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தினோம்.

அதற்கு கல்வெட்டு ஆதாரமாக கோவில் அலுவலகத்தில் வைத்திருந்தோம். கோவில் நிர்வாகம் எங்களிடம் இருந்து இந்து சமய அறநிலை துறைக்கு, மாறி சமயம் அந்த கல்வெட்டை உடைத்து எடுத்துவிட்டு அந்த இடத்தில் வர்ணம் பூசினார்கள். இந்த மனுடன் கல்வெட்டு இருந்த புகைப்படமும் தற்போது எடுத்துவிட்டு வர்ணம் பூசிய புகைப் படத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

எனவே கோவில் நிர்வாகம், நாங்கள் மூன்று குலத்தினரும், தான் நிர்வாகித்து. ஆதாரத்தை அழிக்கும் நோக்கத்துடன் இந்த செயல் செய்யப்பட்டுள்ளது.

எனவே தாங்கள் இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுத்து மீண்டும் அந்த இடத்தில் கும்பாபிஷேக கல்வெட்டை எடுத்த அந்த இடத்திலேயே பதித்து தர வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கள்ன்னிமந்தையம் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் அமைச்சர் சக்கரபாணி உரையாற்றினார். பழனி மாவட்ட சுகாதார இணை இயக்குனர் மரு. உதயகுமார், பழனி மாவட்ட சுகாதார துணை இயக்குனர் மரு. அனிதா, தொப்பம்பட்டி வட்டார மருத்துவ அலுவலர் கோகுல், தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் தாஹிரா, ஒட்டன்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபு பாண்டியன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தாட்கோ மூலம் பன்னிரெண்டாம் வகுப்பு அல்லது பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களுக்கு சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான பயிற்சி அளிக்கப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி நவ 16

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) நிறுவனமானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து போன்ற முன்னணி வெளிநாட்டு பல்கலைகழகங்களில் இளங்கலை அல்லது முதுகலை பட்டபடிப்பு பயில அடிப்படையான International English Language Testing System (IELTS) சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான பயிற்சி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இப்பயிற்சியினை பெற 18 முதல் 35 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்த மாணாக்கர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சிக்கான கால அளவு ஒன்றரை மாதமும் விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கான செலவீன தொகையை தாட் கோவால் ஏற்கப்படும். இப்பயிற்சியில் சேர்வதற்கு www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்யலாம். மேலும் விவரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.




சேலம் மாவட்டம் அயோத்தியாபட்டணம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் செயல்பட்ட வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருததம் -2026 உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# "கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் டெல்லியில் போராட்டம்: அய்யாக்கண்ணு",

"திருச்சி: நவ.16–

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் வக்கீல் அய்யாக்கண்ணு, விவசாய சங்க தலைவர் நாகை காவிரி தனபாலன், தமிழ்நாடு கள் இயக்க தலைவர் நல்லசாமி ஆகியோர் திருச்சி பிரஸ் கிளப்பில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:காவிரியில் மாதந்தோறும் நீர் பங்கீடு செய்வதை நிறுத்தி தினந்தோறும் நீர் பங்கீடு செய்து தமிழகத்துக்கு வழங்க வேண்டும், மேகதாதுவில் அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும், மரபணு திருத்தப்பட்ட பயிர்களை ஊக்குவிப்பதற்கு 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு கண்டனம் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை வரவுள்ள பிரதமர் நரேந்திர மோடியை கண்டித்து கருப்பு கொடி காட்டும் போராட்டம் வரும் 19ந்தேதி நடத்த உள்ளோம்.மேலும் விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்க வேண்டும். விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தனிநபர் இன்சூரன்ஸ் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் நாளை (17ந்தேதி) நூற்றுக்கணக்கான விவசாயிகள் திருச்சியில் இருந்து டெல்லி செல்கின்றனர்.டெல்லியில் பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும். பீகார் தேர்தலில் கள் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த வகையில் வருகிற ஜனவரி மாதம் கள் விடுதலை மற்றும் மதுவிலக்கு மாநாடு நடத்த உள்ளோம்.இது 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.பேட்டியின்போது விவசாய சங்கத் தலைவர்கள் தஞ்சை பழனியப்பன், தீட்சிதர் பாலசுப்ரமணியன், அர்ஜுனன், வாரணவாசி ராஜேந்திரன், நாகை ராமதாஸ், தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மேகராஜன் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.",

# மகளிருக்காக புதிய தொடரை அறிமுகம் செய்தது ஐசிசி",

"உலகம் முழுவதும் மகளிர் கிரிக்கெட்டை ஊக்குவிக்கும் விதமாக 8 அணிகள் பங்கேற்கும் புதிய தொடரை ஐசிசி அறிமுகம் செய்தது. மகளிர் எமர்ஜிங் நேஷனல் டிராபி தொடருக்கான கோப்பையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) அறிமுகம் செய்தது. இந்த தொடர் வருகிற 20ந் தேதி பாங்காக்கில் தொடங்குகிறது.இந்த தொடரில் தாய்லாந்து, நெதர்லாந்து, PNG, ஐக்கிய அரபு, ஸ்காட்லாந்து, நமிபியா, தன்சானியா, உகாண்டா ஆகிய 8 அணிகள் பங்கேற்க உள்ளது குறிப்பிடத்தக்கது. ",

# முதியோர் இல்லத்தில் உடல் நலம் மனநலம் சார்ந்த விழிப்புணர்வு...!




வந்தவாசி, நவ 16:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் மிட் பிரைன் மனநல மையம் மற்றும் மலர் கிளினிக் லேப் இணைந்து முதியோர்களுக்கான உடல் நலனும் மன நலமும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை பிருதூர் புனித வளனார் முதியோர் காப்பகத்தில் நடத்தினர். இந்நிகழ்ச்சிக்கு ரெக்சிலின் மைக்கேல் தலைமை தாங்கினார். சமூக ஆர்வலர்கள் மலர் சாதிக், சு. தனசேகரன், பா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மனோஜ் குமார் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் ஆனந்தன் பங்கேற்று, மருத்துவ முகாமை துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார். மேலும் மனநலம் சார்ந்த குறிப்புகளை மன நல நிபுணர் டாக்டர் இரா.பாஸ்கரன் முதியோர்களுக்கு வழங்கினார். உடற்பயிற்சி மற்றும் எலும்பு சார்ந்த பாதுகாப்பினை டாக்டர் திவ்யதர்ஷினி வழங்கினார். இயன் முறை குறிப்புகளை வழூர் அரசு மருத்துவர் வினோத் குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட முதியோர்கள் பங்கு பெற்று பயனடைந்தார்கள். இறுதியில் பிலோமினா மங்கலம் நன்றியுரை கூறினார்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ராஜகுற்ற தோஷம்.டிச20 வரை குழப்பம் கன்பாரம் –பயம் காட்டும் பாஜக ஜோதிடர்.

சேலம். நவ. 16–

தமிழக கோவில்களில் தொடர்ந்து நடக்கும் குற்றங்கள், ஆகம மீறல்கள், பண மோசடிகள் ஆகியவை 'ராஜகுற்றம்' என்ற தோஷத்தை ஏற்படுத்தும் என்று ஜோதிடரும் தமிழக பா.ஜ., ஆன்மிகம் மற்றும் கோவில் மேம்பாட்டுப் பிரிவு மாநில அமைப்பாளருமான ஷெல்வி தாமோதர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இந்தத் தோஷம் முதல்வர் உள்ளிட்ட ஆட்சியாளர்களைப் பாதிக்கும் என்றும், அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் நிறைவேறாமல் போகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பா.ஜ., ஆன்மிகப் பிரிவு சார்பில் கோவை, சேலம், வேலூர் பெருங்கோட்ட மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் சேலத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஷெல்வி தாமோதர், தமிழக கோவில்களின் நிலை குறித்து ஒவ்வொன்றாக விளக்கினார்.

முதலில் விருதுநகரில் கோவில் காவலாளிகள் கொல்லப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்டிய அவர், 'இதுபோன்ற கொடூரங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்க போலீசார் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும். கோவில்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்' என்றார்.




திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோவில் குறித்து அவர் கூறியதாவது: 'இந்தக் கோவிலில் 30 ஆண்டுகளாக 150 கோடி ரூபாய் டெபாசிட் இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது முழுவதும் காலியாகிவிட்டது. கோவில் பணத்தைச் செலவழிக்க நீதிமன்ற உத்தரவு, சட்ட விதிகள் இருந்தும் அவை மதிக்கப்படவில்லை. இது பெரிய மோசடி' என்றார்.

சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் அக்னி குண்ட விழா குறித்து அவர் வேதனை தெரிவித்தார். 'ஆகம விதிப்படி தலைமுறை தலைமுறையாக நடத்தப்படும் இந்த விழாவை நிறுத்தி வைத்துள்ளனர். இது பாரம்பரியத்திற்கு எதிரானது' என்றார்.

கள்ளக்குறிச்சி பழைய மாரியம்மன் கோவில் இட ஆக்கிரமிப்பு குறித்து அவர் கூறியதாவது: 'கோவில் நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் நீதிமன்ற உத்தரவு வந்த பின்பும் காலி செய்ய மறுக்கின்றனர். ஹிந்து கோவில்களுக்கு மட்டுமே சட்டம் போடப்படுகிறது. மற்ற மத வழிபாட்டுத் தலங்களுக்கு இல்லை' என்றார்.

தேவிகாபுரம் பெரிய நாயகியம்மன் கோவில் கும்பாபிஷேகம் குறித்து அவர் குற்றம் சாட்டினார். 'ஆகம விதிக்கு மாறாக நந்தியம் பெருமானை உயர்த்தி கும்பாபிஷேகம் நடத்தியுள்ளனர். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் தீப்பிடித்த மண்டபத்தைப் புதுப்பிக்காமலேயே கும்பாபிஷேகம் செய்துள்ளனர்' என்றார்.

இதுபோன்ற குற்றங்கள் தொடர்ந்தால் அது 'ராஜகுற்றம்' என்ற தோஷத்தை ஏற்படுத்தும் என்று ஷெல்வி தாமோதர் எச்சரித்தார். 'கோவில்களில் நடக்கும் இத்தகைய குளறுபடிகள் முதல்வர் உள்ளிட்ட ஆட்சியாளர்களுக்கு ராஜகுற்ற த0ஷத்தை ஏற்படுத்தும். இதனால் அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் நிறைவேறாமல் போகும்' என்றார்.

தி.மு.க.,வுக்கு அறிவுரை வழங்கிய அவர், 'கட்சியில் தெய்வீக நம்பிக்கை உள்ளவர்களையும் ஆன்மிக ஞானம் கொண்டவர்களையும் ஒரு குழுவாக அமைத்து, கோவில்களின் பாரம்பரிய நடைமுறைகளைப் பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் தோஷம் அவர்களையே பாதிக்கும்' என்றார்.

ஜோதிட ரீதியாகவும் அவர் கணித்தார்: 'தமிழகத்தில் டிசம்பர் 20 வரை குழப்பங்கள் நீடிக்கும். அதற்குப் பிறகுதான் அடுத்த முதல்வர் யார் என்பது தெரியவரும்' என்றார். இந்தக் கருத்துகள் தமிழக அரசியல் மற்றும் ஆன்மிகவட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. பா.ஜ.,வின் ஆன்மிகப் பிரிவு கோவில் பிரச்சினைகளை முன்னிறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

தமிழக கோவில்களில் தொடர்ந்து நடக்கும் குற்றங்கள், ஆகம மீறல்கள், பண மோசடிகள் ஆகியவை 'ராஜகுற்றம்' என்ற தோஷத்தை ஏற்படுத்தும் என்று ஜோதிடரும் தமிழக பா.ஜ., ஆன்மிகம் மற்றும் கோவில் மேம்பாட்டுப் பிரிவு மாநில அமைப்பாளருமான ஷெல்வி தாமோதர் கடுமையாக எச்சரித்துள்ளார். இந்தத் தோஷம் முதல்வர் உள்ளிட்ட ஆட்சியாளர்களைப் பாதிக்கும் என்றும், அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் நிறைவேறாமல் போகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜோதி நிதியுதவி தொடக்கப் பள்ளியில் தடைகளைத் தாண்டுக தம்பி: சிறார் நூல் வெளியீடு



வந்தவாசி, நவ 16:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளாறு ஜோதி நிதி உதவி பள்ளி குழந்தைகள் தின விழாவில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் பழ.சீனிவாசன் தலைமை தாங்கினார். கவிஞர் பூங்குயில் சிவகுமார் வரவேற்றார்.

நிகழ்வில் அணைக்குடி. சு.சம்பத் எழுதிய 'தடைகளைத் தாண்டுக தம்பி' என்ற சிறார் பாடல்கள் நூலினை கவிஞர் ஆரிசன் வெளியிட்டு பேசியதாவது : குழந்தைகள் தினத்தில் மட்டுமல்லாமல் தினமும் குழந்தைகளை நாம் கொண்டாட வேண்டும் என்றும், குழந்தைகளின் கல்வி சட்டம் உரிமை ஆகியவற்றை வீட்டிலும், பள்ளிகளிலும் நாம் நிலை நாட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.மேலம் தாய்மொழி வழி கல்வியில் பயில்வதை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், தாய்மொழிக் கல்வியே குழந்தைகளுக்கு சிறந்த அறிவாற்றலை தரும் என்றும்,

அறம் வளர்க்கும் திருக்குறளை பள்ளிகளில் முற்றோதல் செய்ய வேண்டும் என்றும், அணைக்குடி. சு.சம்பத் போன்ற கவிஞர்கள் குழந்தைகளுக்கு கிடைத்த பொக்கிஷம் என்றும் பேசினார். முதல் பிரதியை தெள்ளார் ஊராட்சி மன்ற தலைவர் டிகேஜி ஆனந்த் பெற்றுக் கொண்டார். புலவர் ந.பானு, வந்தவாசி நகர மன்ற துணைத் தலைவர் அன்னை க.சீனிவாசன், அரிமா பெ.எட்டியப்பன் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன்

ரோட்டரி.விநாயக மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அணைக்குடி சு.சம்பத் தனது ஏற்புரையில் மயிலை சிவமுத்து போன்ற முன்னோடி கவிஞர்களே என் எழுத்துக்கு வித்து என்று பேசினார்.

இறுதியில் பள்ளி ஆசிரியை தமிழ் முல்லை நன்றி கூறினார். நிகழ்வில் தெள்ளாறு ரோட்டரி கிளப் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பள்ளி இடைநிலை ஆசிரியர்கள் பாக்கியலட்சுமி, வளர்மதி, கோபால கிருஷ்ணன் மற்றும் ரோட்டரி கிளப் பொறுப்பாளர்கள், ஓய்வு பெற்ற மின்வாரிய அலுவலர்கள் ரவி, அஸ்கர் அலி ஆகியோர் பங்கேற்றனர் .

நிகழ்வை வந்தவாசி பூங்குயில் பதிப்பகமும், தெள்ளாறு ஜோதி நிதி உதவி பள்ளியும் இணைந்து நடத்தியது.

## திருப்பத்தூர் அருகே 1970-71 ஆம் ஆண்டில், 10ம் வகுப்பு படித்த மாணவ மாணவிகள் சந்திப்பு

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த மடவாளம் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் கடந்த 1970 71 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு படித்து முடித்தவர்கள் மலரும் நினைவுகள் என நிகழ்ச்சியில் ஒன்று சேர்ந்தனர். மேலும் இந்த மலரும் நினைவு நிகழ்ச்சியில் பள்ளியில் 10ம் வகுப்பில் பயின்ற 50க்கும் மேற்பட்டோர் ஒரே இடத்தில் ஒன்றுகூடி தங்களுடைய மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். மேலும் அவர்கள் படிக்கும் போது இருந்த ஆங்கில ஆசிரியரும் தலைமை ஆசிரியருமான ரத்தினன் நடராஜன் பழைய மாணவர்களுக்கு இன்று ஆங்கிலப்பாடம் கற்றுக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து பள்ளியில் சிறு வயதில் ஆசிரியர்களிடம் அடி வாங்கியதை நினைவு கூறும் வகையில் ஆசிரியரிடம் எங்களை அடியுங்கள் என மாணவர்கள் கேட்டது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# ஈரோடு ஒருங்கிணைந்த வணிக வளாகம் வியாபாரிகள் ஏழு அம்ச கோரிக்கை வலியுறுத்தி கடைகளை அடைத்து உள்ளிருப்பு போராட்டம்..

ஈரோடு. நவ. 16

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகே அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஜவுளி வலாக வியாபாரிகள் பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்து உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகே அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஜவுளி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 2 40 கடைகளை அடைத்து ஜவுளி வியாபாரிகள் உள்ளிருப்பு போராட்டத்தில்.

இவர்கள் 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜவுளி வியாபாரிகள் மாநகராட்சி அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

இந்த வணிக வளாகத்தின் முகப்பு வாயிலை அகலப்படுத்தி தரவேண்டும், 2022 மற்றும் 23 ஆண்டில் கட்டிட பயன்பாட்டிற்கும் முன்பே வசூலித்த, பிப்ரவரி மற்றும் மார்ச் மாத வாடகை தொகையை கழித்து தொடர்ந்து வாடகை செலுத்த வகை செய்ய. ஜவுளி




வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் வாடகையை குறைத்து தர வணிக வளாகத்திற்கு பொருட்கள் வாங்க வரும் வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் வளாகத்தின் மேல் பகுதியில் நிறுத்தும் வாகனங்களுக்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கக் கூடாது.

வணிக வளாகப் பகுதியில் சுற்றி ஏவாரிகளை பாதிக்கும் வகையில் எந்தவித சாலை ஓர தற்காலிக கடைகளை நடத்த அனுமதிக்க கூடாது. வணிக வளாகத்தில் உள்ள கடைகளுக்கு போதுமான பாதுகாப்பு வசதி ஏற்படுத்தி. தர வேண்டும்.

வணிகவளாக உட்பகுதி மற்றும் வெளிப்பகுதியில் போதுமான மின் விளக்குகள் அமைத்து தர வேண்டும். கழிவறைகளை சரியான முறையில் பராமரித்து சுத்தமாக வைத்துக் கொள்ள நிரந்தரமாக துப்புரவு பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஏழு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து மாநகராட்சி அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு தொடர்பாக பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும், ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் வணிக வளாகத்தில் உள்ள 240 கடைகளை அடைத்து வியாபாரிகள் வளாகத்திற்கு உள்ளே, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இது குறித்து தகவல் அறிந்த திமுக மாநகர செயலாளர் சுப்பிரமணி நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை. அப்போதே வியாபாரிகள் எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென அவரிடம் வலியுறுத்தினர். மேலும் தங்களின் ஏழு அம்ச கோரிக்கைகளை ஏழு நாட்களில் நிறைவேற்றி தர வேண்டும் தவறும் பட்சத்தில், அடுத்த கட்ட போராட்டங்களில். ஈடுபடுவோம். என்று வியாபாரிகள் அவரிடம். தெரிவித்தனர். இது குறித்த பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# பிரபஞ்சத்தை காக்க அரியலூர் முதல் தனுஷ்கோடி வரை மிதிவண்டி பயணம்

அரியலூர், நவ. 16–

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் அருகே உள்ள பரணம் கிராமத்தைச்சேர்ந்த இயற்கை ஆர்வலர் பழனிச்சாமி பிரபஞ்சத்தை காக்கும் பயணத்தை அரியலூர் மாவட்டம் கொள்ளிடக் கரையோரம் உள்ள திருமானூரிலிருந்து சனிக் கிழமை மிதிவண்டி பயணத்தை துவங்கி இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி வரை மூன்று நாள் பயணமாக செல்கிறார். இவரது பயணத்தை அகில இந்திய மக்கள் சேவை இயக்க விவசாயப்பிரிவு மாநிலத்தலைவர் தங்க சண்முக சுந்தரம் வரலாறு மீட்புக் குழு இணை ஒருங்கிணைப்பாளர் மு.வரதராஜன் கொள்ளிட நீராதார பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர் சக்திவேல் ஆகியோர் துவங்கி வைத்தனர். இப்பயணத்தின் துவக்க நிகழ்வில் பள்ளி மாணவர்கள் பெண்கள் சமூக ஆர்வலர்கள் நீர்நிலை ஆர்வலர்கள் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். இப்பயணம் குறித்து பரணம் கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி கூறுகையில் பறவைகள் உண்ணும் பழவகை மரங்களை அதிகளவில் நட்டு பராமரிக்க வேண்டும். பறவைகள்






தான் ஏறத்தாழ 80 சதவீத மரங்களை வனங்களில் உருவாக்கி உள்ளது. எனவே வனவிலங்குகள் பறவைகள் இன்னும் பல்வகை உயிரினங்களும் பயன்பெறும் வகையில் மண்ணுக்கேற்ற மரங்களான தேத்தாங் கொட்டை கொடம்புளி இலுப்பை நாவல் வேங்கை கொடுக்காப்புளி ஆலமரம் அரசமரம் உள்ளிட்ட பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு உதவும் வகையிலான மரங்களையும் உயிர்ச்சூழலை காக்கும் கிளுவை கள்ளி செடிகள் உள்ளிட்ட உயிர்வேலிகளை அமைப்பதன் மூலம் குள்ள நரிகளும் மயிலும் முயலும் பாம்பும் சூழலுக்கேற்றவாறு உயிர்ச்சூழல் உணவுச்சங்கிலி அறுந்து போகாமல் தக்க வைக்க உதவும் என்பதனை எனது பயணத்தில் பள்ளி கல்லூரி மாணவர்கள் விவசாயிகள் அனைவரிடமும் வலியுறுத்துவதே நோக்கம் என்றார். மேலும் இரசாயன வேளாண்மையிலிருந்து விவசாயிகள் வெளியேறி இயற்கை வேளாண்மையை முன்னெடுக்க இயற்கை வளம் குன்றாமல் இயற்கை சூழல் மேம்படும் பிரபஞ்சம் முழுவதும் நீர் நெருப்பு எனும் ஒளி ஆகாயம் எனும் அண்டவெளி நிலம் எனும் பூமி காற்றும் மாசுபடாமல் இருக்கும் வகையில் பிரபஞ்சத்தை காக்கும் பயணமாக இருக்கும் என்றார்.

# தேவபாண்டலம் கார்குழலி நினைவு அறக்கட்டளை மற்றும் பாண்டலம் கோவில் நகர அரிமா சங்கம் இணைந்து நடத்திய குழந்தைகள் தின விழா



சங்கராபுரம் நவ 16

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வட்டம் தேவபாண்டலம் கார்குழலி நினைவு கல்வி அறக்கட்டளை மற்றும் பாண்டலம் கோவில் நகர அரிமா சங்கம் இணைந்து செம்பராம் பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தைகள் தின விழா தலைமை ஆசிரியர் (பொறுப்பு) பி.முனியப் பிள்ளை தலைமையிலும், ஊராட்சி மன்ற தலைவர் த.வைத்தியநாதன், அரிமா சங்கத் தலைவர் ஆர்.கிருஷ்ணன் கார்குழலி அறக்கட்டளை செயலாளர் தா.வசந்தா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி மேலாண்மை குழு தலைவர் பவி கிருஷ்ண வேணி, சங்கராபுரம் தமிழ் படைப்பாளர்கள் சங்க செயலாளர் சக்திவேல் அரிமா ஆர்.கே.செல்வமணி ஆகியோர் வரவேற்றனர்.

பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தின விழா போட்டியில் வென்ற மாணவ மாணவிகளுக்கு பாவலர் புதுவை சு.சண்முக சுந்தரம் மத்திய சுங்கம் மற்றும் கலால் துறை இணை ஆணையர் (ஓய்வு) அவர்களும் அரிமா சங்க மாவட்ட தலைவர் க.வேலு அவர்களும் பரிசுகள் வழங்கினார். இந்திய அளவில் குண்டு எறிதல் தட்டு எறிதல் போட்டியில் கலந்து கொள்ள தமிழ்நாடு அரசு சார்பில் தேர்வான சங்கராபுரம் நியூ பவர் பள்ளி மாணவி எஸ்.நித்தீஸ்வரிக்கு தேவபாண்டலம் தொழிலதிபர் ஆறு.கதிரவன் நினைவு பரிசுகள் வழங்கி வாழ்த்தினார். விழாவில் சேவை செம்மல் இராம முத்து கருப்பன் அனைத்து பொது சேவை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் திரைப்பட இயக்குனர் மற்றும் நடிகர் கவிஞர் மு.முருககுமார் தலைவர் கல்லை மாவட்ட முத்தமிழ் சங்கம் கவிஞர் இரா கோ. கலைமகள் காயத்ரி, துணைத் தலைவர் கல்லை மாவட்ட முத்தமிழ் சங்கம் சங்கராபுரம் லைன்ஸ் தலைவர் எஸ்.வேலு, செயலாளர் ஏ.மீரான் ஷா, பொருளாளர் ஆர்.துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளி பட்டதாரி ஆசிரியர் கே.கார்த்திகேயன் மற்றும் கார்குழலி நினைவு அறக்கட்டளை நிறுவனர் இராசு. தாமோதரன் நன்றி கூறினார்.

## தள்ளுவண்டிக் கடைகளுக்கு FSSAI சான்றிதழ் கட்டாயம் என தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை அறிவிப்பு

சென்னை : நவ.16–

தமிழ்நாட்டில் தள்ளுவண்டியில் வைத்து உணவு பொருட்களை விற்பனை செய்யும் அனைத்து வகையான கடைகளுக்கும் திஷிஷிகிமி உரிமம் பெறுவது கட்டாயம் என தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளது. சான்றிதழ் பெறாத கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஆன்லைனில் இலவசமாக சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421